


03. 09. 2025

தலைப்பு செய்திகள்

- திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத்தின் 10-வது பட்டமளிப்பு விழாவில் குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று பிற்பகல் பங்கேற்கிறார்.
- நக்சல் தீவிரவாதிகளை வேரோடு களையும் வரை மத்திய அரசு ஓயாது என்று உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா உறுதிபட தெரிவித்துள்ளார்.
- புதுதில்லியில் 56-வது சரக்கு சேவைவரி குழு கூட்டம் மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தலைமையில் இன்று தொடங்கியது.
- இங்கிலாந்து கேம்ப்பிரிட்ஜ் பல்கலைக்கழக நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இன்று பங்கேற்கிறார்.
- ஆசிய கோப்பை ஆடவர் ஹாக்கி சூப்பர் 4 சுற்றில் இந்தியா இன்றிரவு தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத்தின் 10-வது பட்டமளிப்பு விழாவில் இன்று பங்கேற்கிறார்.

இந்நிகழ்ச்சியில் ஆயிரத்து 10 மாணாக்கருக்கு பட்டங்களை வழங்குவதோடு, 45 மாணாக்கருக்கு தங்க பதக்கங்களை வழங்கி, பட்டமளிப்பு உரை நிகழ்த்துகிறார்.

இந்நிகழ்வில் பங்கேற்பதற்காக இன்றுகாலை தனி விமானம் மூலம் திருச்சி விமான நிலையம் வந்த குடியரசு தலைவரை ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி, மாநில அமைச்சர்கள் திரு.கே.என்.நேரு, திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திருமதி. கீதாஜீவன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. வி.சரவணன் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

தொடர்ந்து குடியரசு தலைவர் விமானப்படையின் ஹெலிகாப்டர் மூலம் திருவாரூர் சென்றடைந்தார்.

திருவாரூரில் இன்று பிற்பகல் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற பின்னர் மாலையில் ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோவிலில் குடியரசு தலைவர் சுவாமி தரிசனம் மேற்கொள்கிறார்.

குடியரசு தலைவரின் வருகையை ஒட்டி ஸ்ரீரங்கம் கோவில் வளாகம் மற்றும் தாயார் சன்னதியில் சிவப்பு கம்பளம் விரிக்கப்பட்டுள்ளதோடு, கொடிமரம் பூக்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீரங்கம் கோவில் பகுதி முழுவதும் 5 அடுக்கு பாதுகாப்பு கட்டமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

பாதுகாப்பு காரணங்களை கருதி பிற்பகல் ஒருமணிக்கு மேல் கோவில் வளாகத்தில் பக்தர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கோவில் வளாகம் முழுவதிலும் பாதுகாப்பு பிரிவினரும், காவல்துறையினரும் தீவிர சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி புதுதில்லியில் நடைபெறும் செமிகான் இந்தியா 2025 மாநாட்டில் வல்லுநர்களுடன் இன்று கலந்துரையாடினார்.

மின்னணு கண்காட்சியை பார்வையிட்ட அவர், செமிகண்டக்டர் தொடர்பான திட்டங்களையும், உற்பத்தி பொருட்களையும் பார்வையிட்டார்.

இந்த மாநாட்டின் ஒருபகுதியாக உயர் நிர்வாக அதிகாரிகள், உலகளாவிய தொழில் தலைவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கும் வட்டமேஜை கூட்டத்திலும் பிரதமர் கலந்துகொள்கிறார்.

செமி கண்டக்டர் சூழல் அதன் வளர்ச்சி மேம்பாடு குறித்து இதில் விரிவாக ஆராயப்படுகிறது.

உலகளாவிய செமி கண்டக்டர் விநியோக சங்கிலியில் நம்பகத்தன்மையுடைய நட்புறவு நாடாக இந்தியாவை நிலைநிறுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

நக்சல் தீவிரவாதிகளை அகற்றும் வரை மத்திய அரசு ஓயாது என்று உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

சட்டீஸ்கட் மாநிலத்தின் கரேகுட்டாலு மலைப்பகுதிகளிலிருந்து 31 நக்சலைட் தீவிரவாதிகளை வெற்றிகரமாக அப்புறப்படுத்திய மத்திய ரிசர்வ் காவல்படையினர் உள்ளிட்ட பாதுகாப்பு படையினருக்கு விருதுகளை வழங்கி அமைச்சர் இன்று கவுரவித்தார்.

நக்சல் இல்லாத நாடாக இந்தியா உருவெடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முனைப்புடன் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

கடினமான பருவநிலைகளையும், சூழல்களையும் பொருட்படுத்தாது, பாதுகாப்பு படையினர் ஒருங்கிணைந்த உணர்வுடன் செயலாற்றி நக்சலைட் முகாமை தகர்த்தழித்தாகவும் அமைச்சர் பெருமிதம் தெரிவித்தார்.

நக்சல் தீவிரவாதிகளால் இப்பகுதியில் வளர்ச்சி பாதிக்கப்பட்டதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இப்பகுதியில் உள்ள தீவிரவாதிகள் அகற்றப்பட்டதால், பசுபதிநாத் முதல் திருப்பதி வரையிலுள்ள மலைப்பகுதிகளில் வசிக்கும் ஆறரை கோடி மக்களின் வாழ்வில் புதிய எழுச்சி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நக்சல் தீவிரவாதிகளை கையாள்வதில் பலத்த காயமடைந்த பாதுகாப்பு படையினரின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டிருப்பதாகவும் அமைச்ச கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா - ஆலோசனை கூட்டம்

தமிழ்நாட்டில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்து விவாதிப்பதற்காக பி.ஜே.பி. மூத்த தலைவர்கள் கூட்டம் அக்கட்சியின் மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு.அமித்ஷாவின் இல்லத்தில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் கட்சியின் தேசிய தலைவர் திரு.ஜே.பி.நட்டா, பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட தமிழகத்தின் மூத்த தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

இதனிடையே பீஹார் சட்டப்பேரவை தேர்தல் தொடர்பான கட்சி நிலைப்பாடுகள் குறித்து விவாதிப்பதற்காக பி.ஜே.பியின் உயர்நிலை கூட்டமும் திரு. அமித்ஷா தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தலைமையில் 56-வது சரக்கு சேவைவரி குழு கூட்டம் புதுதில்லியில் இன்று தொடங்கியது.

2 நாட்கள் நடைபெறும் இந்த கூட்டத்தில் அடுத்த தலைமுறையினருக்கான சரக்கு சேவைவரி சீர்த்திருத்தங்கள், வரிகட்டமைப்பை எளிமையாக்கும் நடவடிக்கைகள் போன்றவை குறித்து ஆராயப்படுகிறது.

அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிதியமைச்சர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

இதனிடையே புதிய சரக்கு சேவைவரிகள் வரும் நவராத்திரி முதல் நடைமுறைக்கு வரும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

❖❖❖❖❖❖❖❖

பூட்டான் பிரதமர்

பூட்டான் பிரதமர் தாஷோ ஷெரிங் டாப்கே 4 நாள் அரசுமுறை பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

பீஹாரில் அமைந்துள்ள ராயல் பூட்டான் கோவில் கும்பாபிஷேக நிகழ்ச்சியில் நாளை அவர் பங்கேற்கிறார்.

அயோத்தியாவிலுள்ள ஸ்ரீராமர் கோவிலையும் பூட்டான் பிரதமர் பார்வையிடுகிறார்.

இந்த பயணத்தின் ஒருபகுதியாக பிரதமர் தாஷோ ஷெரிங், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கரை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இங்கிலாந்தில் உள்ள கேம்ப்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் இன்று பங்கேற்கிறார்.

தொடர்ந்து தொழில்முனைவோரையும், முதலீட்டாளர்களையும் சந்தித்து தமிழ்நாட்டில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுக்கிறார்.

நாளை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் உரையாற்றும் முதலமைச்சர் பல்கலைக்கழக வளாகத்தில் பெரியாரின் திருவுருவச் சிலையை திறந்து வைக்கிறார்.

முன்னதாக முதலமைச்சரின் ஜெர்மனி பயணத்தின் போது 7 ஆயிரத்து 20 கோடி ரூபாய் முதலீட்டில் 26 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. இதன்மூலம் 15 ஆயிரத்து 320 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

தமிழ்நாட்டில் சமூக ஊடக தகவல்களை சரிபார்ப்பது குறித்த சிறப்பு பயிற்சி 47 ஆயிரம் பேருக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று இதுதொடர்பாக நாட்டுநலப்பணித்திட்ட மாணாக்கருக்கான பயிற்சி நிறைவு நாளில் உரையாற்றிய அவர், மாணவர்கள், அரசு அலுவலர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கு இப்பயிற்சிகள் வழங்கப்பட்டதாக கூறினார்.

சமூக ஊடகங்களில் தவறான தகவல்களை பரப்புபவர்களை கையாளும் போர்வீரர்களாக பயிற்சி பெற்ற மாணாக்கர் செயல்பட வேண்டுமென்றும் அவர் அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖

மா.சுப்ரமணியன்

மக்களை தேடி மருத்துவம் திட்டம் கடைக்கோடி மக்களுக்கும் பயனளிப்பதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

தேனி மேகமலை பகுதியின் மணலாறு, வெண்ணியாறு, மகாராஜாமெட்டு ஆகிய கிராமங்களில் வீடுவீடாக சென்று இத்திட்டம் குறித்து அமைச்சர் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக 24 வட்டாரங்களில் வளர்இளம் பெண்கள் கர்ப்பம் அடைவதை தடுப்பதற்கான விழிப்புணர்வு தெரு நாடகங்கள் திட்டத்தை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

சர்பானந்த சோனோவால்

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின் பசுமை ஹைட்டரஜன் முன்னோடி தயாரிப்பு நிலையத்தை மத்திய துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு.சர்பானந்த சோனோவால் நாளைமறுநாள் தொடங்கி வைக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

நாகை வாய்ஸ்

மத்திய அரசின் விவசாயிகளுக்கான ட்ரோன் திட்டம் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உறுதி செய்துள்ளதாக நாகை மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

நெல்லை வாய்ஸ்

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நெல்லை மாவட்ட தீயணைப்புத்துறை சார்பில் அவசர கால பேரிடர் ஒத்திகை பயிற்சி தாமிரபரணி ஆற்றில் இன்று நடைபெற்றது.

இதுகுறித்து நெல்லைமாவட்ட தீயணைப்பு அலுவலர் பானுப்ரியா

❖❖❖❖❖❖❖❖

ஹாக்கி

பீகார் ராஜ்கிரில் ஆசிய கோப்பை ஆடவர் ஹாக்கி சூப்பர் 4 சுற்று போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

இரவு ஏழரை மணிக்கு நடைபெறும் முதல்போட்டியில் இந்தியா - தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

செஸ்

பீடே கிராண்ட் ஸ்விஸ் செஸ் போட்டிகள் உஸ்பெகிஸ்தானில் இன்று தொடங்குகின்றன.

வரும் 15-ம் தேதிவரை நடைபெறும் இந்த போட்டியில் இந்தியாவின் பிரக்ஞானந்தா, குகேஷ், அர்ஜுன் எரிகேசி, நடப்பு சாம்பியன் விதித் குஜராத்தி, களமிறங்குகின்றனர்.

இந்த போட்டியில் ஆடவருடன் திவ்யா தேஷ்முக் போட்டியிட இருப்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

நியூயார்க்கில் நடைபெறும் US ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு இந்தியாவின் யூகிபாம்ப்ரி - நியூசிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை இன்று முன்னேறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖